எண்.எ.21013(23)/தசெ(ப)/பகா/2018
புதுச்சேரி அரசு
தலைமைச் செயலகம்(பணியாட்சியம்)
******

புதுவை, நாள் 14.06.2019

**ஒப்பந்தபுள்ளி மற்றும் ஏல அறிவிப்பு**

புதுச்சேரி அரசு தலைமைச் செயலகத்திற்குச் சொந்தமான கீழே குறிப்பிட்டுள்ள பழைய பொருட்களை விற்பதற்கு, அப்புறப்படுத்த மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | ஒரு கிலோவிற்கான விலை ரூ. பை. |
|---|---|
| 1) பழைய ஆங்கில செய்தித்தாள்கள் | : |
| 2) பழைய தமிழ் செய்தித்தாள்கள் | : |
| 3) பழைய ஆங்கிலம் மற்றும் தமிழ் இதழ்கள் | : |
| 4) கிழிந்த காகிதங்கள் | : |
| 5) உடைந்த பொருட்கள் | |
| 1. பிளாஸடிக் | : |
| 2. உலோகம் | : |

2. அரக்கு மூடி முத்திரையிட்ட உறையில் பழைய செய்தித்தாள்கள் வாங்குவதற்கான ஒப்பந்தபுள்ளி என்று குறிப்பிட்டு அரசு துணை செயலர் (பணியாட்சியம்), தலைமைச் செயலகம், புதுச்சேரி, என்ற முகவரிக்கு வரும் 03.07.2019 அன்று மதியம் 12.00 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு அனுப்பி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் யாவும் அன்றைய தினமே மாலை 04.00 மணிக்கு கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரியின் அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்தாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

3. தேவை ஏற்படும் தருவாயில், நிர்ணையிக்கப்பட்ட அதிகபட்ச ஒப்பந்த புள்ளியிலிருந்து ஒப்பந்தாரர் முன்னிலையில் பகிரங்க ஏலம் நடத்தப்படும்.

**4. ஒப்பந்த விற்பனையில் பங்குபெறும் ஒப்பந்ததாரர்கள் ரூ.1000/- ( ருபாய் ஆயிரம் மட்டும்) முன்வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். முகவரி மற்றும் அடையாள சான்றாக ஆதார் அட்டை நகல், அல்லது வேறு ஏதேனும் ஒரு சான்று நகல் சமர்பிக்க வேண்டும் மேலும் GST பதிவு நகலும் இணைக்கப்பட வேண்டும்.**

5. வெற்றி பெறாத ஒப்பந்ததாரர்களின் முன்வைப்புத் தொகை ஒப்பந்த விற்பனை முடிந்த உடன் திருப்பித் தரப்படும். ஒப்பந்ததாரர் தக்க **அடையாள சான்று சமர்பித்து முன்வைப்புத் தொகையை பெற்றுக் கொள்ளவும்.**

6. மேலே குறிப்பிட்ட நேரத்திற்கும், தேதிக்கும் பின்வரும் ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. யாதொரு காரணமும் குறிப்பிடாமல் அனைத்து அல்லது எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் நிராகரிக்க கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு முழு உரிமை உண்டு.

8. ஒப்பந்த விற்பனை முடிந்தவுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தாரர், அழைக்கப்படுமபோது விற்பனை பொருளின் முழுத்தொகையையும் செலுத்திவிட்டு அவரது சொந்தப் பொறுப்பில்.ஃசெலவில் 24 மணி நேரத்திற்குள் மேற்சொன்ன அலுவலகத்தை விட்டு மேற்படி பழைய பொருட்களை அப்புறப்படுத்திவிட வேண்டும். தவறினால் அவர் செலுத்திய முன்வைப்புத் தொகையை இழக்க நேரிடும்.

9. ஒப்பந்த விற்பனை முடிந்தவுடன் விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கைப்பற்றியோ மற்றும் தரத்தைப்பற்றியோ, இந்த அலுவலகம் எந்தவிதப் பொறுப்பும் ஏற்காது.

10. விருப்பமுள்ள ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட பழைய பொருட்களை, ஏதேனும் ஒரு அலுவலக நாட்களில் வந்த பார்த்து கொள்ளலாம்.

11. ஏதேனும் உடன்பாடின்மை ஏற்படுமாயின் கீழ்கையோப்பமிட்டுள்ள அதிகாரி அவர்களின் முடிவே இறுதியானது.

12. ஓவ்வோரு பொருளுக்கும் விலை தனித்தனியே குறிப்பிடவேண்டும்.

13. ஒப்புக்கொள்ளப்பட்ட/ இறுதிச் செய்யப்பட்ட அதிகபட்ச விலையானது, அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அமலில் இருக்கும்.

14. தற்போதைய விதிமுறைகளின்படி பொருள்கள் மற்றும் சேவைகள் வரி பழைய செய்தித்தால்கள, இதழ்கள் மற்றும் உடைந்த பொருட்களுக்கு பெறப்படும். **ஒப்பந்தாரர் ஜி.எஸ்.டி. பதிவு எண் பெற்றவராக இருக்க வேண்டும்.**

14.6.19

**(மு. கண்ணன்)**
சார்பு செயலர்(பணியாட்சியம்)